**ஜூன் – 3**

**"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது." -சங் 19 : 1 - 4.**

வானத்தின் இந்த அற்புதமான காட்சி பகலிலும் இரவிலும் நம்முடைய துதியையும் வணக்கத்தையும் வருவிக்க வேண்டும். நம்முடைய இருதயங்களில் பரிசுத்தமான வணக்கமுள்ள பக்தியை ஏவ வேண்டும். அவைகளின் சப்தமில்லாத செயலும், தெய்வீக சட்டத்துக்குப் பூரண கீழ்ப்படிதலும், வானமண்டலத்து எண்ணற்றவைகளின் ஆசிர்வாதமான பிரகாசமும், நல்நடத்தைக்கும் ஆரோக்கியத்திற்கும் அனுகூலமான அவைகளின் படிப்பினைகளை, அதாவது, கலக்கமோ அல்லது ஆடம்பரமோ இல்லாமல் ஆர்வத்துடன் சுறுசுறுப்பாக செயல்புரியும் படிப்பினைகளை, எல்லாக் காரியங்களையும் ஒன்றாகச் செய்கிறவரும், தவறு செய்யாதபடி அவ்வளவு ஞானமுள்ளவரும் யாருடனாவது அன்பற்றவராயிராதபடி அவ்வளவு நல்லவருமாயிருக்கிற அவருடைய சித்தத்துக்குப் பூரண கீழ்ப்படிதலின் படிப்பினையையும், நம்மைப் பிரகாசித்த கர்த்தருடைய மகிமை நம்மைப் பார்க்கும் ஜனங்களின் மேல் திரும்பி, நம்மிலிருந்து பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்கிற படிப்பினையும், நம்முடைய மனதில் பதிய வைப்பதாக. **- Z ’95, 121 (R 1811).**

இயற்கையின் பல்வேறு பொருள்களும் ஒழுங்குகளும் நம்முடைய கவனமுள்ள மனதிற்கு கர்த்தரின் குணங்களை வெளிப்படுத்துவதோடல்லாமல், இந்தப் பொருள்களும், ஒழுங்குகளும் அவருடைய குணங்களையும் ஏற்பாட்டையும் வெளிப்படுத்துகிற காரியங்களை சங்கேதத்தினால் தெரிவிக்க உபயோகிக்கப்படுகின்றன என்று நாம் காண்கிறோம். இவ்விதமாக, புதிய வானங்கள் வரப்போகிற யுகத்தில் அவருடைய குணத்தைத் தெரிவிக்கும். தீமைகள் கொண்ட இரவுகள், பல தீய வகுப்பார் அனுபவித்த தீமைகளைக் கொண்ட வெவ்வேறு காரியங்களையும், விசேஷமாக எப்பிபனி காலத்தை சங்கேதத்தினால் தெரிவிக்கின்றன. முன்னால் நேரிட்டவைகள் பின்தொடர்கிறவைகளை முன்னறிவிக்கின்றன. உதாரணமாக அறுப்பின் காலத்திலும் இணையான நேமகங்களிலும் நேரிட்டவைகள். **-P ’26, 76.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ஆதி 1:1-2:7; ஏசா 40:26; யோபு 9:8,9; 12:7-9; 28:23-26; 37:16,18; 38:4,7-10; சங் 8:3-9; 104:2-6,24; 136:5-9; எரே 51:15,16; ரோம 1:19,20; எபி 11:3,10. **கோபுரவாசிப்பு : Z ’13, 101 (R 5209)**

**வினாக்கள்:** சொல்லர்த்தமான உலகம் – அடையாளமான உலகம் - பிற்கால சொல்லர்த்தமான உலகம், அடையாளமான உலகம் சம்பந்தமாக இந்த வாரத்தில் நான் தியானம் செய்தேனா? தேவன்பேரில் நான் கொண்டுள்ள பயபக்தியில் அவை நடப்பித்த கிரியை என்ன?